பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1,2,3 பகுதிகளில் நெமிலிச்சேரி பாத்திமா நகர் சாம்பர்ஸ் காலனி ஆகிய பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள் பம்மல் நாகல்கேணி அனகாபுத்தூர் பாபு ரெட்டி ஆவின்யூ பழைய பல்லாவரம் ராஜீவ் காந்தி நகர் வாத்தியார் மாணிக்கம் தெரு ஆகிய பகுதிகளில் சிறு உயர் கோபுர மின் விளக்குகள் திமுக நாடாளுமன்ற குழு தலைவர் கழகப் பொருளாளர் டி. ஆர் .பாலு தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 28.80 லட்சம் மதிப்பீட்டில் அமைத்துத் தந்து பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி தலைமையில் மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். அதைத்தொடர்ந்து பழைய பல்லாவரம் பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழக கொடி ஏற்றி ஏழை தாய்மார்களுக்கு நல திட்ட உதவிகளை வழங்கினார். அப்போது மண்டல தலைவர்கள் இ. ஜோசப் அண்ணாதுரை, வே. கருணாநிதி, மாநகராட்சி சுகாதாரக் குழு தலைவர் இரா. நரேஷ் கண்ணா, பகுதி கழகச் த. ஜெயக்குமார், இ. எஸ். பெர்னார்ட், ஏ. கே. கருணாகரன், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர், கழக நிர்வாகிகள், நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்

ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமை!

ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. - கதிர் ஆனந்த் எம்.பி. பங்கேற்பு!

வேலூரில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

வேலூர், ஜூன் 29-

வேலூர் மாநகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் இன்று மாலை அண்ணா கலையரங்கம் அருகில் நடக்கிறது.

கூட்டத்துக்கு மாநகர தி.மு.க. செயலாளர் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமை தாங்குகிறார். சேண்பாக்கம் பகுதி செயலாளர் பி.முருக பெருமாள் அனைவரையும் வரவேற்று பேசுகிறார். மாநகர துணை செயலாளர் சூரி என்ற கோவிந்தன், ஏ.ஆர். முன்னாஷெரீப், தேவநேசன், தங்கமணி, ஆனந்தன், நா.அசோகன், சசிகுமார் எம்.ஏ.கணேஷ் சங்கர் எஸ். தயாள்ராஜ், வி.ஜி.கே.சுந்தர விஜி, ஆர்.சத்தியமூர்த்தி, ஜி.பால முரளி கிருஷ்ணா, ஆர்.கே.ஐயப்பன், தி.அ.முனவர்பாஷா, வீனஸ் நரேந்திரன், கே.யூசூப்கான் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி சிறப்புரையாற்றுகிறார்.

இதில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., கழக தணிக்கைக் குழு உறுப்பினர் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த், வேலூர் தொகுதி பொறுப்பாளர் வி. விஜயகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம். சுனில் குமார் மற்றும் கழக முன்னணி யினர் கழகத்தினர் கலந்து கொள்கிறார்கள்.

தலைமைச் செயலகத்தில் நேற்று (28.06.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களை போற்றும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் ""தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் என்ற குழுவின் முதல் ஆலோசனைக் கூட்டம், இக்குழுவின் தலைவரும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான இ.பெரியசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சமூக நலம் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளரும், உறுப்பினர் செயலருமான முனைவர் ப.செந்தில்குமார், உறுப்பினர்கள் நீதியரசர் அக்பர் அலி, கவிஞர் ரவி சுப்பிரமணியம், சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் இன்னாசிமுத்து, கால்டுவேல் வேள்நம்பி, கவிஞர் மனுஷ்யபுத்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கடலூர் கீரப்பாளையம் ஒன்றியத்தில் கால்நடை மருத்துவ முகாம்!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்!

கடலூர், ஜூன் 29-

தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை, பால்வளத்துறை மற்றும் தமிழ்நாடு கால்நடை மருந்து அறிவியல் பல்கலைகழகம் இணைந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாபெரும் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம், கீரப்பாளையம் ஒன்றியம், ஆயிப்பேட்டை கிராமத்தில் நடைப்பெற்றது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், கழக உயர்நிலை செயல்திட்டகுழு உறுப்பினருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார். கால்நடைகளுக்கு நோய்த்தடுப்பூசி, விவசாயிகளுக்கு தீவன உற்பத்தி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் அதிகளவு பால் உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ம. இராஜசேகரன், கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி திட்ட இயக்குநர் வி.மதுபாலன், உதவி ஆட்சியர் சிதம்பரம் சுவேதா சுமன், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள் கூடுதல் இயக்குனர் ஆ.சுமதி, ஒன்றிய கழக செயலாளர்கள் அ.முத்துசாமி, வி.ஜி.பி. சபாநாயகம், கே.ஆர். ராயர், முத்து.பெருமாள், டி.திருமூர்த்தி, டாக்டர் எம்.மனோகர், பொதுக் குழு உறுப்பினர் கே.பி. ஆர்.பாலமுருகன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள், விவசாயிகள், பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

சிறப்பு மெகா கால்நடை மருத்துவ விழிப்புணர்வு முகாம்!

அமைச்சர் கா.ராமச்சந்திரன் - ஆ.ராசா எம்.பி. சிறப்புரை!

நீலகிரி, ஜூன் 29-

நீலகிரி மாவட்டத்தில், கலைஞரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பால்வளத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், கூடலூர் ஊராட்சி ஒன்றியம் மசினகுடி ஊராட்சி பகுதியில் நடைபெற்ற சிறப்பு மெகா கால்நடை மருத்துவம் மற்றும் விழிப்புணர்வு முகாமினை, சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா ஆகியோர் தொடங்கி வைத்து பல்வேறு அரங்குகளை பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேச்சு:

இம்முகாமில் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது:

ஏழை, எளிய மக்கள் தங்களது வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தில், காலம் முழுவதும் மக்களுக்காக பணியாற்றிய மகத்தான மனிதர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் ஜூன் 3 ஆம் தேதி கொண்டாடப்பட்டது. அவரை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர், ஓராண்டு காலம் தமிழகம் முழுவதும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிடவும், பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்திடவும் தெரிவித்துள்ளார். அதனடிப்படையில், நமது மாவட்டத்தில், பால்வளத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில், கலைஞரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு "சிறப்பு மெகா கால்நடை மருத்துவம் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்" கூடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மசினகுடி மற்றும் கூடலூர் வட்டம் தேவர் சோலை ஆகிய கிராமங்களில் 27.06.2023 மற்றும் 12.07.2023 ஆகிய தேதிகளில் நடத்தப்பட திட்டமிடப்பட்டு இன்றைய தினம் கூடலூர் ஊராட்சி ஒன்றியம் மசினகுடி பகுதியில் "சிறப்பு மெகா கால்நடை மருத்துவம் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்று கொண்டிருக்கிறது. விவசாயிகள் விவசாயம் செய்கின்ற நேரத்தினை தவிர்த்து, இடைப்பட்ட நேரங்களில் கால்நடைகளை வளர்த்து அதன் மூலம் வருமானத்தினை பெருக்கி வருகின்றனர்.

இன்று மிகச்சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கும் இம்முகாம்களில், ஆண்மை நீக்கம், நோய் வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், குடற்புழு நீக்கம் செய்தல், தடுப்பூசி போடுதல், இலவச செயற்கை முறை கருவூட்டல், சிறு அறுவை சிகிச்சை, தடுப்பூசி போடுதல், மலட்டு தன்மை நீக்க சிகிச்சை, சினை பரிசோதனை போன்ற சிறு அறுவை சிகிச்சைகளும், இலவச தாது உப்பு கலவை வழங்குதல், கே.சி.சி கடன் அட்டை வழங்குதல், விவசாய கடன் மேம்பட்ட பால் உற்பத்தி பற்றி கலந்துரையாடல், சிறந்த கால்நடை வளர்ப்பவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட உள்ளது.

நமது மாவட்டத்தில் இதுவரை சுமார் 160 சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டதில் 67,827 கால்நடைகள் பயன்பெற்றுள்ளன. காப்பீட்டு திட்டத்தின் கீழ் 1,062 கால்நடைகளுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளன. கோழி அபிவிருத்தி திட்டத்தின் கீழ், புறக்கடை கோழி வளர்ப்பு திட்டம் மூலம் 40,000 அசீல் இன நாட்டு கோழிகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய செயற்கை கருவூட்டல் திட்டத்தின் மூலம் 24,739 கால்நடைகளுக்கு இலவசமாக செயற்கை கருவூட்டல் செய்யப்பட்டுள்ளன.

மேலும், 1,034 விவசாயிகளுக்கு கே.சி.சி.கடன் அட்டைகளும், ரூ.49 இலட்சத்தில் 120 மகளிர் பால் உற்பத்தியாளர்களுக்கு சாண எரிவாயு அடுப்பு மற்றும் கலன்களும், பால் உற்பத்தியாளர் சிறப்புப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.63 இலட்சம் மதிப்பில் மானிய விலையில் கலப்பு தீவனம் மற்றும் விதைகளும், 2022-2023 சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 100 சதவீதம் மானியத்தில் ரூ.18 இலட்சம் மதிப்பில் ஐஸ்கிரீம் விநியோக வாகனம் மற்றும் சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 100 சதவீதம் மானியத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு மேற்கூரை அமைக்க ரூ. 22 இலட்சமும் என பல்வேறு நலத்திட்ட உதவிகள் கடந்த இரண்டு ஆண்டு காலங்களில் வழங்கப்பட்டுள்ளது.

இதே போன்று ஒவ்வொரு துறையின் வாயிலாக பல்வேறு திட்டங்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அரசால் அறிவிக்கப்பட்டு வருகிறது. இதனை பொதுமக்கள் பெற்று பயன்பெற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

ஆ.ராசா எம்.பி. பேச்சு!

இம்முகாமில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா தெரிவித்ததாவது:

கலைஞரின் நூற்றாண்டு விழாவினை தொடர்ந்து, அரசால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டும், பல்வேறு நலத்திட்ட உதவிகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, இன்றைய தினம் பால்வளத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், கூடலூர் ஊராட்சி ஒன்றியம் மசினகுடி ஊராட்சி பகுதியில் சிறப்பு மெகா கால்நடை மருத்துவம் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடந்த ஓராண்டு காலமாக நீலகிரி 200 என்ற தலைப்பில், உதகை கண்டறிந்து கட்டமைத்த ஜான் சல்லீவன் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் ரூ.10 கோடி சிறப்பு நிதி ஒதுக்கிடு செய்தார்கள். அதனை தொடர்ந்து, பல்வேறு கலை நிகழ்ச்சி மற்றும் பாரம்பரிய நிகழ்ச்சிகள் மாவட்டத்தில் நடத்தப்பட்டது. கலைஞரின் திட்டங்களை நினைவு கூரும் வகையில் இதுபோன்ற விழாக்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. அனைத்து கிராமங்களுக்கும் மின்வசதியை ஏற்படுத்தி தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் 70 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தினை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் பணியாற்றியவர் கலைஞர். அவர்களை நினைவு கூரும் வகையில் கொண்டாடப்படுவதே இந்த கலைஞர் நூற்றாண்டு விழாவாகும்.

நேற்றைய தினம் கடந்த இரண்டு ஆண்டுகளில் நடைபெற்ற பணிகள் ஆய்வு மேற்கொண்டதில், நமது மாவட்டத்தில் சுமார் ரூ.250 முதல் ரூ.300 கோடி மதிப்பில் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் நடைபெற்றுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் மாவட்டத்தில் இதுபோன்ற வளர்ச்சி பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்பதனை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆ.ராசா எம்.பி. தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர், விவசாயிகளுக்கு ஜே 225 இராமலிங்கா பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு தாட்கோ உதவியுடன் நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் 23

கறவை மாட்டு கடன் 30 சதவிகித மானியத்துடன் தலா ரூ.80,000/ வீதம் 23 பயனாளிகளுக்கும், ஈ.டி.553 கப்பச்சி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு தாட்கோ நிதியுதவியுடன் நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலம் கறவை மாட்டுக்கடன் 30 சதவீதம் மானியத்துடன் தலா ரூ.1.10 இலட்சம் வீதம் 10 நபர்களுக்கும், தாட்கோ திட்டத்தின் மூலம் துவங்கப்பட்ட ஆனைக்கட்டி மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு 100 சதவீதம் மானியத்தில் பால் கேன்களும், ஜே 200 மசினகுடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் 7 உறுப்பினர்களுக்கு இந்தியன் வங்கி மூலம் 7 விவசாயிகளுக்கு தலா ரூ.1 இலட்சம் வீதம் கறவை மாட்டுக்கடன் உதவிகளையும், ஜே 200 மசினகுடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தை சார்ந்த 7 உறுப்பினர்களுக்கு இந்தியன் வங்கி மூலம் கே.சி.சி திட்டத்தின் மூலம் தலா ரூ.14,000/ வீதம் கறவை மாடுகள் பராமரிப்புக்கடனுதவிகளையும், ஜே 67 கூடலூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தினை சார்ந்த 7 நபர்களுக்கு நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி வாயிலாக தலா ரூ.50,000/ வீதம் கறவை மாட்டு கடன் உதவிகளும், ஜே 67 கூடலூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் 348 உறுப்பினர்களுக்கு (01.04.2022 முதல் 28.02.2023 வரை) சங்கத்திற்கு வழங்கிய மொத்தம் 8,38,857.500 லிட்டர் பாலுக்கு 1 லிட்டருக்கு ரூ.7 வீதம் மொத்தம் ரூ.58,72,002.50 கூடுதல் கொள்முதல் விலைக்கான ஆணையினை சங்கத்தின் செயலாளர் அவர்களிடம் வழங்கினார்கள்.

முன்னதாக, ஜமாபந்தியில் பெறப்பட்ட கல்லூரி மாணவ, மாணவிகளின் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், உதகமண்டலம், மூலம் நாடுகாணியிலிருந்து கூடலூர், தெப்பக்காடு பொக்காபுரம் வழிதடத்தில் கூடுதலாக ஒரு முறை பேருந்து இயக்கும் சேவையினை, சுற்றுலாத்துறை அமைச்சர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர், கொடியசைத்து கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

இம்முகாமில், மாவட்ட ஊராட்சித்தலைவர் மு.பொன்தோஸ், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கீர்த்தி பிரியதர்சினி, மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) மரு. பகவத்சிங், இணை இயக்குநர்/பொது மேலாளர் (ஆவின்) ஜெயராமன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் பொது மேலாளர் நடராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திராவிடமணி (கூடலூர்), நகர்மன்ற தலைவர்கள் திருமதி.வாணீஸ்வரி (உதகை), திருமதி.பரிமளம் (கூடலூர்), ஊராட்சி ஒன்றிய தலைவர்கள் மாயன் (எ) மாதன் (உதகை), திருமதி.கீர்த்தனா (கூடலூர்), மசினகுடி ஊராட்சி தலைவர் திருமதி.மாதேவி மோகன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மத்தியப் பிரதேச தேர்தல் பிரச்சாரத்துக்கு களம் இறங்கிய

பிரதமர் மோடி - பற்றி எரியும் மணிப்பூருக்குச் செல்ல முடியவில்லை!

'தினகரன்' தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை.ஜூன்.29-

மணிப்பூர் மாநிலமே 60 நாட்கள் கடந்தும் இன்னும் கலவரத்தால் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. ஆனால் அங்கு செல்லவும், பத்திரிகையாளர்களை சந்திக்கவும் விருப்பமில்லாத பிரதமர் மோடி மத்திய பிரதேச மாநில தேர்தல் பிரச்சாரத்தில் களம் இறங்கியுள்ளார் என 'தினகரன்' நாளேடு 28.6.2023 அன்று தலையங்கத்தில் குற்றம் சாட்டியுள்ளது.

தினகரன்

நாள் 28, 2023 புதன்கிழமை

எது தடுக்கிறது?

மே 3ம் தேதியில் இருந்து மணிப்பூர் பற்றி எரிந்து கொண்டு இருக்கிறது. கர்நாடகா தேர்தல் பிரசாரத்திற்கு சென்றதால் பிரதமர் மோடியால் அதை கவனிக்க முடியவில்லை. தேர்தல் முடிவுகள் வந்த பிறகு, அமெரிக்க பயணத்திற்கு தயாராக வேண்டியது இருந்ததால் கவனிக்க முடியவில்லை. அமெரிக்காவில் இருந்து வந்த பிறகும் இப்போதும் மணிப்பூர் செல்வதையும், அங்கு தினம் தினம் நடக்கும் படுகொலைகளை தடுத்து நிறுத்த தேவையான நடவடிக்கைகளை எடுப்பதையும் பிரதமர் மோடியை எது தடுக்கிறது?

இதுகுறித்து அத்தலையங்கம் வருமாறு:

மே 3 ஆம் தேதியில் இருந்து மணிப்பூர் பற்றி எரிந்து கொண்டு இருக்கிறது. கர்நாடகா தேர்தல் பிரசாரத்திற்கு சென்றதால் பிரதமர் மோடியால் அதை கவனிக்க முடியவில்லை. தேர்தல் முடிவுகள் வந்த பிறகு, அமெரிக்க பயணத்திற்கு தயாராக வேண்டியது இருந்ததால் கவனிக்க முடியவில்லை. அமெரிக்காவில் இருந்து வந்த பிறகும் இப்போதும் மணிப்பூர் செல்வதையும், அங்கு தினம் தினம் நடக்கும் படுகொலைகளை தடுத்து நிறுத்த தேவையான நடவடிக்கைகளை எடுப்பதையும் பிரதமர் மோடியை எது தடுக்கிறது? மணிப்பூரில் தினம் தினம் அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். அவர்களின் உடைமைகள் தீ வைத்து எரிக்கப்படுகின்றன.

யாரும் கேட்பாரில்லை. 13 ஆயிரம் ராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டு இருக்கிறது. கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. மே 3 ஆம் தேதியில் இருந்து இன்று வரை இன்டர்நெட் தடை செய்யப்பட்டு இருக்கிறது. ஆனாலும் அமைதி திரும்பவில்லை. சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு பிறகு நெஞ்சுரம் கொண்ட, சாணக்கியத்தனம் மிக்க மிகப்பெரிய உள்துறை அமைச்சர் கிடைத்து இருக்கிறார். அவர் சென்ற இடமெல்லாம் வெற்றி, வெற்றி என்று புழாங்காகிதம் அடைந்தார்களே?.

அப்பேற்பட்ட அமித்ஷா அங்கு சென்று 4 நாள் தங்கியிருந்தும் அவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லையே. விழிபிதுங்கி அல்லவா திரும்பி வந்து இருக்கிறார். மணிப்பூர் மாநிலமே 60 நாட்களை கடந்தும் இன்னும் கலவரத்தால் பற்றி எரிந்து கொண்டு இருக்கிறது. ஆனால் பிரதமர் மோடி இதைப்பற்றி இன்னும் ஒரு வார்த்தை பேசவில்லை. மக்கள் அமைதி காக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கக்கூட இல்லை. அமெரிக்கா சென்று வந்த பிறகு இப்போது இந்த ஆண்டு இறுதியில் வர இருக்கும் மத்தியபிரதேச மாநில தேர்தல் பிரசாரத்தில் களம் இறங்கி இருக்கிறார்.

மத்தியபிரதேசத்திற்கு செல்ல முடிந்த அவரால் மணிப்பூர் செல்ல முடியவில்லை. அந்த மாநிலத்தை அமைதியாக்கும் நடவடிக்கையை கூட எடுக்க முடியவில்லை. அங்கு சென்றும் கூட நாட்டில் நிலவும் பிரச்னைகளை பற்றியோ, ஏன் மணிப்பூர் பற்றியோ, வேலை வாய்ப்பின்மை பற்றியோ, விலைவாசி உயர்வு பற்றியோ, பெட்ரோல், டீசல் விலை 400 நாட்களுக்கும் மேலாக ஒரே விலையில் விற்பனை செய்வது பற்றியோ அல்லது நாட்டில் தலைவிரித்தாடும் ஏழ்மை நிலைமை பற்றியோ பேச முடியவில்லை. ஆனால் 2024 நாடாளுமன்றத் தேர்தலை மனதில் வைத்து பொதுசிவில் சட்டத்தைப் பற்றி பேச துணிவு வந்து இருக்கிறது.

நமது பிரதமரிடம் கேட்க ஆயிரம் கேள்விகள் உள்ளன. ஆனால் அவரை யாரும் கேள்வி கேட்க முடியவில்லை. இன்றுவரை பத்திரிகையாளர்களை சந்திக்காத ஒரே பிரதமர் அவர் தான். அமெரிக்காவில் அவரை கேள்வி கேட்ட பெண் நிருபர் சப்ரினா சித்திக்கையும் ஆன்லைனில் மிரட்டி இருக்கிறார்கள்.

காஷ்மீர் என்ற மாநிலத்தை உருக்குலைத்து ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் என்று யூனியன் பிரதேசங்களாக பிரித்து, தனித்தனி கவர்னர்கள் நியமித்து விட்டார்கள். 5 ஆண்டுகள் கடந்தும் இன்று வரை தேர்தல் ஜனநாயகத்திற்குள் காஷ்மீர் கொண்டு வரப்படவில்லை. இந்தியாவின் ஜனநாயக பாதையில் காஷ்மீர் இல்லை. இப்போது மணிப்பூர் மாநிலத்தையும் அதே பாதையை நோக்கி கொண்டு செல்கிறார்கள். அங்கு பா.ஜ ஆட்சி நடந்தாலும் விரைவில் மணிப்பூரிலும் ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்படும். தேர்தல் ஜனநாயகத்தில் இருந்து அந்த மாநிலமும் அப்புறப்படுத்தப்படும். இது தான் இவர்களுக்கு தெரிந்த ஜனநாயக வழி.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

தஞ்சை வடக்கு மாவட்டத்தில்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! கலைஞரின் திரைப்படங்கள் இலவசமாக திரையிடல்!

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பிலும் மற்றும் கும்பகோணம் வாணி விலாச சபாவின் சார்பிலும் விஜயலெட்சுமி திரையரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 65 ஆண்டுகால திரை பயணத்தில் ராஜகுமாரி முதல் பொன்னர் சங்கர் வரை உள்ள 74 திரைப்படங்களை வாரம் ஒரு திரைப்படம் வீதம் திரையிடுவதுடன் ஒரு நாள் இலவசமாக தொடர்ந்து அனைத்து படங்களும் திரையிடப்பட உள்ளதால் அத்திரைப்படங்களின் உரிமைகளை பெற்றுள்ளவர்கள் மற்றும் அது சம்பந்தமாக தொடர்புடையவர்கள் அத்திரைப்படங்களை திரையிடுவதற்கான உரிமையை பெறுவதற்கான நடைமுறைகளை தெரியப்படுத்துமாறும், மேலும், தங்களிடம் முறைப்படி நாங்கள் அனுமதி பெற்று படங்களை திரையிடுவதற்கு உதவிடுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சு.கல்யாணசுந்தரம் எம்.பி. செயலாளர்,
வாணி விலாச சபா
மாவட்ட கழகச் செயலாளர்
தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க.

க.அன்பழகன் எம்.எல்.ஏ.
தலைவர்
வாணி விலாச சபா.
குடந்தை சட்டமன்ற தொகுதி.

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்டத்தில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம் நாராயணன் தலைமையில் வட்ட செயலாளர் இ கண்ணப்பன் முன்னிலையில் 15 இடங்களில் கழக கொடி ஏற்றி 300 பேருக்கு புடவைகள் மாவட்ட செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் அறிவழகி பாலகிருஷ்ணன் ஆ. ராஜேந்திரன் பி தரணி கே சிவசங்கரன் அருள் வெங்கடேசன் பரசுராமன் மாரி ரமேஷ் முத்தையா புவனேஸ்வரி மகேஷ் குமார் பி கே கண்ணன் உள்ளிட்ட திமுகவினர் கலந்து கொண்டார்.